**செய்தி வெளியீடு எண்: 033** **நாள்: 11.01.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் இன்று **(11.1.2019)** முகாம் அலுவலகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்திற்கும், அமெரிக்க நாட்டின் இட்டாச்சா நகரில் உள்ள கார்னெல் பல்கலைக்கழகத்திற்கும் (Cornell University) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு நீர் பற்றாக்குறையான மாநிலம் என்பதால், நீர் மேலாண்மையில் புதிய நடைமுறைகளைக் கொண்டு வருவதற்கும், வேளாண்மை மற்றும் தோட்டக் கலையில் துல்லியமான உயர் தொழில்நுட்பத்தை செயல்படுத்தவும், வேளாண் வணிகத்தை உயர்த்தவும், கால்நடை மற்றும் மீன்வளம் போன்ற பிற இனங்களில் புதுமைகளை புகுத்தவும், உலகளவில் தற்போது செயல்பாட்டில் உள்ள மிகச்சிறந்த நடைமுறைகளை பயன்படுத்திக்கொள்ள தமிழ்நாடு அரசு விரும்புகிறது.

வள மேலாண்மை, வாழ்க்கை அறிவியல் மற்றும் வேளாண் அறிவியலில் உலகின் இரண்டு சிறந்த பல்கலைக்கழங்களில் ஒன்றாக அமெரிக்க நாட்டின், இட்டாச்சா நகரில் அமைந்துள்ள கார்னெல் பல்கலைக்கழகம் விளங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம், அவ்வப்போது ஏற்படும் பருவநிலை மாற்றத்திற்கேற்ப நீர் மேம்பாட்டு நடைமுறைகளை செயல்படுத்துவது தொடர்பாகவும், கால்நடைத் துறையை நவீனப்படுத்துவது தொடர்பாகவும், பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு, அவற்றில் பல புதுமைகளை புகுத்தி, அவை வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. கார்னெல் பல்கலைக்கழகத்தின் அங்கமாக செயல்பட்டு வரும் பன்னாட்டு செயல்முறை, வேளாண் மற்றும் அறிவியல் ஆய்வு கல்லூரியானது உணவு, எரிசக்தி, சுற்றுச்சூழல், வாழ்க்கை அறிவியல், சமூக மற்றும் பொருளாதார நலன் போன்றவற்றில் பல ஆய்வுகளை மேற்கொண்டு சிறந்து விளங்குகிறது.

வேளாண் உற்பத்தியை அதிகரித்தல், பருவநிலைக்கு ஏற்ப ஒருங்கிணைந்த வேளாண் முறையை பின்பற்றுதல், நீர்மேலாண்மையை மேம்படுத்துதல், வேளாண் தொழில் முனைவோர்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுத்தல் போன்றவற்றை முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டு உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த, நீர் மற்றும் நில மேலாண்மை திட்டத்தை தமிழ்நாட்டில் சிறந்த முறையில் செயல்படுத்திட, தமிழ்நாடு நீர் வள, நில வளத் திட்டத்திற்கும், கார்னெல் பல்கலைக்கழகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்று கையொப்பமிடப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழ்நாடு நீர்வள, நில வள திட்டத்தின் சார்பில் அதன் இயக்குநர் திரு.விபு நய்யர், இ.ஆ.ப., அவர்களும், கார்னெல் பல்கலைக்கழகத்தின் அங்கமாக செயல்படும் பன்னாட்டு செயல்முறை, வேளாண் மற்றும் அறிவியல் ஆய்வு கல்லூரியின் செயல் முதல்வர் டாக்டர் ஜான் பெப்பெர் அவர்களும் (Executive Dean - Dr. John Pfeffer) கையெழுத்திட்டனர்.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக, கார்னெல் பல்கலைக்கழகம் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்ட அமைப்புடன் இணக்கத்துடன் செயல்பட்டு, வேளாண் அறிவுத்திறனை மேம்படுத்துதல், கால்நடை மற்றும் மீன்வளத்துறை ஆகியவற்றில் புதிய உத்திகளை புகுத்துதல், தொழில்நுட்ப பரிமாற்றம் ஆகியவை ஏற்படுத்தப்படுவதோடு, வேளாண் புரட்சியை ஏற்படுத்த வழிவகுக்கும்.

இந்த நிகழ்வின்போது, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., நீர்வள ஆதாரத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் (பொது) திரு.எம். பக்தவத்சலம், கார்னெல் பல்கலைக்கழகத்தின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 11.01.2019**